

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் மதுரையில், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ.செந்தில்குமார், தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் போடி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களை, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து, நலம் விசாரித்தார். மேலும், அவர் விரைவில் குணமடைந்து இயக்கப் பணியாற்ற, தனது அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

தமிழகம் முழுவதும் தி.மு.க. மகளிர் அணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

6. திருவாரூர் - **தமிழரசி ரவிக்குமார், அஞ்சுகம் பூபதி**
7. மதுரை - **பவானி ராஜேந்திரன், வழக்கறிஞர் ஷாமிலி பிரபா,**
8. சென்னை தெற்கு - **விஜயா தாயன்பன், டாக்டர் கனிமொழி சோமு, ராணி ரவிச்சந்திரன், ரத்னா லோகேஷ்வரன், டாக்டர் யாழினி P.M**
9. காஞ்சிபுரம் - **பிரியா ராஜன், நிவேதா ஜெசிகா**
10. நாகப்பட்டினம் - **ஆண்டாள் பிரியதர்ஷினி**
11. தேனி - **திவ்யா சத்யராஜ்**
12. திருச்சிராப்பள்ளி - **விஜிலா சத்யானந்த், கவிதா**
13. கள்ளக்குறிச்சி - **ரேகா பிரிய தர்ஷினி, டாக்டர் மலர்விழி,**
14. செங்கல்பட்டு - **சேலம் சுஜாதா**
15. கடலூர் - **அங்கையற்கண்ணி**
16. தஞ்சாவூர் - **காரல் மார்க்ஸ், அனிச்சம் கனிமொழி**
17. கிருஷ்ணகிரி - **சுஜாதா, ஸ்ரீலேகா**
18. அரியலூர் - **A.ரியா**
19. ஈரோடு - **நாக நந்தினி, கலைசெல்வி**
20. இராணிப்பேட்டை - **அமுலு விஜயன்**
21. கரூர் - **நிரஞ்சனா செந்தில்குமார், கவிதா கல்யாண சுந்தரம்**
22. திருப்பத்தூர் - **கவிதா தண்டபாணி, ராஜராஜேஸ்வரி**
23. திருப்பூர் - **மாலதி நாகராஜ், கயல்விழி செல்வராஜ், சத்யா பழனிக்குமார், உமா மகேஷ்வரி,**
24. திருவண்ணாமலை - **T.R. காயத்ரி**
25. பெரம்பலூர் - **மகாதேவி ஜெயபால்**
26. புதுக்கோட்டை - **கலைமணி பாரதி, தெய்வானை, உஷா ராணி**
27. மயிலாடுதுறை - **தீன்ஷா**
28. விருதுநகர் - **வழக்கறிஞர் ஸ்ரீநிதி,**
29. விழுப்புரம் - **தேன்மொழி, பெனாசீர்**
30. வேலூர் - **டாக்டர் மாலதி**
31. தென்காசி - **சாஷா, திவ்யா மணிகண்டன்**
32. தர்மபுரி - **ரோஜா**
33. திண்டுக்கல் - **கிருத்திகா தங்கபாண்டி, லக்ஷிகா வேலுமணி, சித்ரா**
34. திருநெல்வேலி - **முத்துசெல்வி, ரஹீமா**
35. திருவள்ளூர் - **டாக்டர் கிருத்திகா**
36. நாமக்கல் - **டாக்டர் கோகிலாமணி**
37. நீலகிரி - **வைஷ்ணவி** ஆகியோர் தலைமையேற்று கண்டன உரையாற்றினர்.

செயலற்ற 'டம்மி' முதல்வர் ஆட்சியைக் கண்டித்து தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மகளிர் அணியினர் லட்சக்கணக்கில் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

தன் வாழ்நாளில் பெரும் பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர்!

பசும்பொன் தேவர் திருமகனாருக்கு – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, நவ. 1 - பசும்பொன் தேவர் அவர்களின் குருபூஜை நாளான நேற்று முன்தினம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "தன் வாழ்நாளின் பெரும் பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர், பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:

நாட்டு விடுதலைக்காகப் போராடிய பசும்பொன் திருமகனார் அவர்களின் பிறந்த நாள் இன்று.

குற்றப்பரம்பரைச் சட்டம் வாய்ப்பூட்டுச் சட்டம் போன்ற அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடியவர். தன் வாழ்நாளில் பெரும்பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர்.

அரசியல் இயக்கத்தின் தலைவராகவும் மக்கள் பிரதிநிதியாகவும் அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திட்டமிட்டு Fake ID உருவாக்கி தவறானப் பதிவு செய்து அதனடிப்படையில் அதிகாலை 5 மணிக்கு

பொருளாதார நிபுணர் கலையரசனை கைது செய்து அச்சுறுத்துவதுதான் தூய ஆட்சியின் லட்சணமா சி.எம்.சார்!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, நவ. 1- சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களின் விலை மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் இரண்டு மடங்கு அதிக விலையில் விற்கப்படுவதாகச் சொன்ன பொருளாதார நிபுணர் "பேராசிரியர் கலையரசன்" பெயரில் திட்டமிட்டு *fake id* உருவாக்கி தவறான பதிவு செய்து அதனடிப்படையில் அதிகாலை



ஐந்து மணிக்கு கைது செய்து அச்சுறுத்துவது தான் தூய ஆட்சியின் லட்சணமா *CM Sir?*

பேராசிரியர் கலையரசன் கைதை கண்டித்து அரசியல் தலைவர்கள், பொது நிலையினர், பத்திரிக்கை, தொலைக்காட்சி, சோசியல் மீடியாக்களின் கடுமையான கண்டனத்திற்கு அடிபணிந்து பேராசிரியர் கலையரசனை அழைத்து "*sorry*" கேட்கும் முதல்வரே!, திட்டமிட்டு *fake id* உருவாக்கி காவல்துறையைக் கைக்கூலியாக ஏவிவிட்ட கொடூரக் குற்றவாளி மீதும்,

கைது செய்த காவலர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து சட்டத்தின் முன் நிறுத்தி, நீதி வழங்க தயங்குவது ஏன் *CM Sir.?*

உங்கள் ஆட்சியின் அவலத்தை சுட்டிக்காட்டு கின்றவர்களை அடக்கி ஒடுக்கி அச்சுறுத்துவதில் காட்டும் வேகத்தை உங்கள் கட்சி நிர்வாகிகள் கஞ்சா, மெத்தம் பெட்டமைன், போதை வஸ்துகளை தயாரித்து தங்கு தடையின்றி தமிழக மாணவ சமுதாயத்திற்கு விற்பனை செய்து கொள்ளையடிப்பதை தடுத்து நிறுத்தத் துப்பில்லாமல் செயல்படும் காவல்துறைக்கு பொறுப்பு வகிக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா *CM Sir.?*

இவ்வாறு அவர் தனது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.



அண்ணாநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த மிசா சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் உடல் மீது கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

நவ.1 முதல் தமிழகத்தில் மீண்டும் மழை!

சென்னை, நவ. 1–

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2–3 செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று காலை 08.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக 31–ந் தேதி வலுப்பெறக்கூடும். அதன் பிறகு, அடுத்த 2 நாட்களில் இது மேற்கு–வடமேற்கு திசையில் ஆந்திரப் பிரதேச கடற்கரையை நோக்கி நகரக் கூடும்.

நேற்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தெற்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். நேற்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.



பஹ்ரைன் சென்றுள்ள, மாநிலங்களவை கழக உறுப்பினர் கவிஞர் திருமதி ராஜாத்தி சல்மா, பஹ்ரைனில் அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் பிரதீப்ராஜ் புரோகித் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார். பாரதி தமிழ் சங்கத்தின் தலைவர் வல்லம் பஷீர், அப்துல் கய்யூம் ஆகியோர் அப்போது உடனிருந்தனர்.

மிசா சோ.மா.இராமச்சந்திரன் மறைவு!

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் – தயாநிதி மாறன் – நே.சிற்றரசு – கலாநிதி வீராசாமி – எம்.கே.மோகன் அஞ்சலி செலுத்தினர்!

சென்னை, நவ. 1 - அண்ணா நகர் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், ஒருங்கிணைந்த அண்ணா நகர் பகுதியின் 25 ஆண்டு கால பகுதிக் கழகச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடி மிசா சோ.மா.இராமச்சந்திரன் (வயது 100) நேற்று முன்தினம் (30.10.2026 - வெள்ளிக் கிழமை) மதியம் 1.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, அண்ணா நகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர்



வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த மிசா சோ.மா.இராமச்சந்திரன் அவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (31.10.2026 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அரும்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.